**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.05** **நாள் : 28.11.2017**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி தேர்தல் பொதுப்பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் அறிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தல் 21.12.2017 அன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. எனவே, மேற்கண்ட தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் நன்னடத்தை விதிகள் முழுமையாக அமலில் உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம், சட்டமன்ற இடைத்தேர்தல் பணிகளை பார்வையிடுவதற்காக புதுடில்லியில் தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணைய தலைமை விழிப்பு அலுவலராக (Chief Vigilance Officer) பணியாற்றும் திரு.கம்லேஷ் குமார் பந்த், இ.ஆ.ப., அவர்களை பொதுப்பார்வையாளராக நியமித்துள்ளது. அவர்களை 94450 71063 என்ற கைபேசி எண்ணிற்கு பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம். மேலும், காவல்துறை சட்ட ஒழுங்கு பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு.இம்மானுவேல் கே. முய்வா, இ.கா.ப., அவர்களை 94450 71061 என்ற கைபேசி எண்ணிலும் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்.

இந்த இடைத்தேர்தலை முன்னிட்டு, தேர்தல் விதிமீறல் குறித்து கண்காணித்திட பறக்கும் படை, நிலைக்கண்காணிப்பு குழு மற்றும் வீடியோ கண்காணிப்பு குழு போன்ற பல்வேறு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1913 மற்றும் ஒரே நேரத்தில் வரும் 4 அழைப்புகளை ஏற்றுக்கொள்ளும் வசதியுடைய 1800–4257012 என்ற தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண்ணிலும், மேலும், 75502 25820, 75502 25821 என்ற வாட்ஸ் ஆப் எண்களிலும் பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் அனைவரும் இந்த இடைத்தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்திட ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**